இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2022/2023

மட்டம் - 5

இறுதிப்பரீட்சை – 2023

**SNE 5247/ESE5147** – உள்ளடங்கல் வகுப்பறை பிள்ளைகளின் பிரச்சனைகளைக் கையாளுதல்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 11.11.2023 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

---

பகுதி **I** இன் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** எவையேனும் மூன்று (03) வினாக்களுக்கும் மாத்திரம் விடை தருக.

## பகுதி – I

1. இலங்கையில் இயலாமையடையோர் தொடர்பான தேசிய கொள்கையின்படி கட்டாயக் கல்விக் கட்டளைச் சட்டமானது 5 – 14 வயதுடைய அனைத்து குழந்தைகளுக்கும் பொருந்தும், இருப்பினும் நடைமுறையில் பல இயலாமைகளையுடைய குழந்தைகள் பாடசாலைக் கல்வியைத் தொடங்கவோ அல்லது பாடசாலைக்குச் சேரவோ இல்லை.
   - பாடசாலைக்குச் சேர்க்கப்படாத **ஐந்து** (05) வகையான குழந்தைகளைப் பட்டியற்படுத்துக.

2. விசேட தேவைகளையுடைய குழந்தைகளுக்கான கல்வியில் பெற்றோரின் ஈடுபாட்டின் **ஐந்து (05)** நன்மைகளைக் குறிப்பிடுக.

3. "இயன்றளவு இழிவாளவான கட்டுப்பாட்டுடைய சூழல்" (Least Restrictive Environment) என்பதனை ஒரு உதாரணத்துடன் விளக்குக.

4. மிகவும் வினைத்திறனுள்ள உள்ளடங்கல் வகுப்பறைச் சூழலை உருவாக்க ஆசிரியர்கள் செயல்ப்படுத்தக்கூடிய **ஐந்து** (05) உத்திகளைக் குறிப்பிடுக.

5. இலங்கையில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட குழந்தைகளின் பாடசாலை அனுமதி தொடர்பாக பெற்றோர்கள் எதிர்கொள்ளும் **மூன்று** (03) சவால்களை விவரிக்குக.

6. இயலாமைகளையுடைய மாணவர்களையும் இயலாமைகளற்ற சாதாரண மாணவர்களையும் கொண்ட உள்ளடங்கல் வகுப்பறைகளின் நன்மைகளைச் சுருக்கமாக விளக்குக.

7. தனியாள் மையக் கல்வித்திட்டக் (IEP) குழுவின் **ஐந்து (05)** இன்றியமையாத உறுப்பினர்களைக் குறிப்பிடுக.

8. உள்ளடங்கல் வகுப்பறையில் இணை கற்பித்தலின் **ஐந்து** (05) நன்மைகளைக் குறிப்பிடுக.

**(5 x 8 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. "உள்ளடங்கலின் தரமான கல்வி வலுவான உள்ளடங்கலையுடைய சமூகங்களுக்கு வழிவகுக்கிறது"

   **i.** மேலே குறிப்பிட்ட கூற்றை **மூன்று** (03) உதாரணங்களை முன்வைத்து விமர்சனரீதியாக பகுப்பாய்வு செய்க **(08 புள்ளிகள்)**

   **ii.** இலங்கையில் சிறப்பான உள்ளடங்கற் கல்வியை மேம்படுத்த **மூன்று** (03) பரிந்துரைகளை முன்வைக்குக. **(08 புள்ளிகள்)**

iii. மேற்குறிப்பிட்ட பரிந்துரைகளை அமுல்படுத்தும் போது பங்குதாரர்கள் எதிர்கொள்ளும் **இரண்டு** (02) சவால்களை விளக்குக. **(04 புள்ளிகள்)**

10. "பெற்றோர்களுக்குத் தங்கள் குழந்தைகளின் கல்வியில் ஈடுபட உரிமை உண்டு"

   i. பாடசாலையுடன் பயனுள்ள கூட்டுறவை உருவாக்க பெற்றோரின் **ஐந்து** (05) உரிமைகளைப் பட்டியலிட்டு அவற்றில் ஒன்றை விவரிக்குக. **(05 புள்ளிகள்)**

   ii. பெற்றோர் ஆதரவுக் குழுக்களில் அங்கம் வகிக்கும் பெற்றோர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் எவ்வாறு கற்றுக்கொள்கிறார்கள் என்பதை மதிப்பிடுக. **(08 புள்ளிகள்)**

   iii. உங்கள் சொந்த வார்த்தைகளில் "பெற்றோர் ஆதரவுக் குழுவை" வரைவிலக்கணப்படுத்தி பெற்றோர் ஆதரவு குழுக்களின் **மூன்று** (03) நன்மைகளைச் சுருக்கமாக விளக்குக. **(07 புள்ளிகள்)**

11.

   i. உங்கள் வகுப்பறையில் நீங்கள் சந்தித்த ஒட்டிசத்தையுடைய குழந்தையின் **மூன்று** (03) பண்புகளை விளக்குங்கள். **(06 புள்ளிகள்)**

   ii. உள்ளடங்கல் வகுப்பறையில் மேற்கண்ட மாணவருடன் நீங்கள் எதிர்கொள்ளக்கூடிய **நான்கு** (04) சவால்களை ஆராய்க. **(08 புள்ளிகள்)**

   iii. உள்ளடங்கல் வகுப்பறையில் ஆசிரியராக மேற்கூறிய சவால்களை சமாளிக்க ஆலோசனைகளை வழங்குக. **(06 புள்ளிகள்)**

12. நீங்கள் நடத்தை சார் பிரச்சினைகள் உள்ள குழந்தையின் பெற்றோராக கற்பனை செய்து கொள்ளுங்கள்.

   i. மேற்கண்ட குழந்தை வெளிப்படுத்தக்கூடிய **ஐந்து** (05) சவாலான நடத்தையைக் குறிப்படுக. **(05 புள்ளிகள்)**

   ii. இக்குழந்தையின் நடத்தை சார் பிரச்சினைகளால் உள்ளடங்கல் வகுப்பறையில் ஏனைய மாணவர்கள் எதிர்கொள்ளக் கூடிய **மூன்று** (03) சவால்களை விவரிக்குக. **(07 புள்ளிகள்)**

   iii. ஒரு ஆசிரியர் வகுப்பறைக்குள் சகபாடிகளுடனான சமூகத் தொடர்புகளை எவ்வாறு ஏற்பாடு செய்யலாம் என்று எடுத்துக்காட்டுக்களுடன் வாதிடுக. **(08 புள்ளிகள்)**

13.

   i. விசேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர் ஒருவரை அவரது வீட்டிற்கு அருகாமையில் உள்ள பாடசாலையில் தரம் - 01 இற்குச் சேர்க்கும் போது அதிபர் எதிர்கொள்ளும் **ஐந்து** (05) பிரச்சினைகளைக் குறிப்பிடுக. **(05 புள்ளிகள்)**

   ii. இலங்கையில் உள்ள பாடசாலைகளில் உள்ளடங்கற் கல்வியை நடைமுறைப்படுத்துவதில் உள்ள **ஐந்து** (05) தடைகளை விவரிக்குக. **(07 புள்ளிகள்)**

   iii. மாணவர்களின் வீட்டிற்கு அருகிலுள்ள சாதாரண பாடசாலைகளில் விசேட கல்வித் தேவைகளைக் கொண்ட குழந்தைகளின் உள்ளடங்கல் நடைமுறைகளை மேம்படுத்துவதற்கு **மூன்று** (03) மேலதிக ஏற்பாடுகளை முன்வைத்து ஆராய்க. **(08 புள்ளிகள்)**

14. "இலங்கையில் உள்ளடங்கற் கல்விக்கு வசதியாக இலங்கையின் கல்வி முறை மறுசீரமைக்கப்பட வேண்டும்"

   i. மேலே உள்ள கூற்றை உங்கள் நோக்கில் வாதிடுக. **(06 புள்ளிகள்)**

   ii. இலங்கையில் உள்ளடங்கற் கல்வி முறையை மறுசீரமைப்பதற்கான உங்கள் முன்மொழிவுகளை முன்வைக்குக. **(06 புள்ளிகள்)**

   iii. கல்வி முறையில் மாற்றத்திற்கான செயல்முறையில் பங்குதாரர்களது உள்ளடங்கலின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக. **(08 புள்ளிகள்)**

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -